## தேவகோட்டையில்

# பாரதி இலக்கிய அரங்க விழா



தேவகோட்டையில் நடந்த பாரதி விழாவில் கல்லூரி தலைவர் லெட்சுமணன் பேசினார்.

தேவகோட்டை, மே 5: தேவகோட்டையில் சாகித்திய அகாதெமி மற்றும் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி தமிழ்த்துறை உயராய்வு மையம் இணைந்து மகாகவி பாரதி இலக்கிய அரங்க விழா நடத்தியது. கல்லூரி தலைவர் லெட்சுமணன் தலைமை தாங்கினார். கல்லூரியின் ஆட்சி குழு துணைத் தலைவர் சேவுகன், செயலாளர் சாந்தி, முதல்வர் சிந்தாமணி வஸ்திராணி முனைவர் சுகண்மணி வாழ்த்துரை வழங்கினர்.

இலக்கிய அரங்கில் \"பாரதியின் அரசியல் கோட்பாடு\" என்னும் தலைப்பில் பேராசிரியர் ஆனந்தகுமார், \"பாரதியின் மொழி பெயர்ப்பு கோட்பாடு\" என்னும் தலைப்பில் முனைவர் பழனி ராகுலதாசன், \"பாரதியின் பெண்ணியக்கோட்பாடு\" என்னும் தலைப்பில் பேராசிரியர் செந்தமிழ்ப்பாவை, \"பாரதியின் மொழி கோட்பாடு\" என்னும் தலைப்பில் பேராசிரியர் பழனியப்பன், \"பாரதியின் சமூகவியல் கோட்பாடு\" என்னும் தலைப்பில் முனைவர் முருகன் இலக்கிய உரை நிகழ்த்தினர்.

விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.